**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.387 நாள்: 13.08.2026

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, தேனாம்பேட்டை மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-110க்குட்பட்ட நுங்கம்பாக்கம் மயானபூமியின் மழைநீர் வடிகால் மற்றும் லயோலா கல்லூரி பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்களை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.08.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக, மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், அண்ணாநகர் மண்டல அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சொத்துவரி தொடர்பான உதவி மையத்தில் மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் பெறும் நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

இந்த ஆய்வுகளின்போது, மண்டல அலுவலர் திரு.எஸ்.செந்தில்குமரன், மேற்பார்வைப் பொறியாளர்கள் திரு.ஆர்.ஏ.பிரபாகரன் (மழைநீர் வடிகால்), திரு.என்.திருமுருகன் (மத்திய வட்டாரம்) உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**